ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2369/02 - 2024 ජනවාරි මස 29 වැනි සඳුදා - 2024.01.29

*2369/02 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ் எல்பிட்டிய பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தவிசாளர் என்ற பதவியிலிருந்து விலகியுள்ளாரென கருதப்படுகின்றமை காரணமாக எல்பிட்டிய பிரதேச சபையின் தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) எனும் பிரிவின் கீழ், தவிசாளர் பதவி வகித்த பொன்னம்பெரும ஆரச்சிகே கருணாசேன என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் தவிசாளர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான எல்பிட்டிய பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள தவிசாளர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மல்லியாவடு நலின் சமிந்த பிரியதர்ஷன என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும் ;

எல்பிட்டிய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான, வேவெல்வல ஹேவகே ரவீந்ர விஜய குமார ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, மல்லியாவடு நலின் சமிந்த பிரியதர்ஷன என்பவர் எல்பிட்டிய பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

**டபிள்யூ. எச். ஆர். விஜய குமார,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
எல்பிட்டிய பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
காலி,
*2024, சனவரி 29.*

EOG *01 - 0218*

1A - G 41319 — 16 (2024/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*